மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03–ம் நாள் செவ்வாய்கிழமை
அ.வ.எண். 22/21
பி.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்:அப்துல் முணாப் | தேதி : 03.02.26 |
| வயது : | த/பெ : பீர் முகமது |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>03.02.26 குறுக்கு விசாரணை</u>

1. என்னுடைய எதிர்வழக்குரையில் பத்தி 10 ல் வாதியின் தபசில் சொத்து பிரதிவாதியின் தோட்டத்தின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள முள்வேலிக்கு தெற்கு பக்கத்தில் காலி இடமாக உள்ளது என்று நான் சொல்லியுள்ளது சரிதானா என்றால் சரிதான். நான் முள்வேலி என்று குறிப்பிடப்பட்டுள்ளது முள் கம்பியை குறிக்கும் என்றால் சரிதான். என்னுடைய மேற்படி முள் கம்பி வேலிக்கு வெளியே தெற்கு பக்கத்தில் வாதியின் தபசில் சொத்து உள்ளதாக கட்சி செய்கிறேன் என்றால் சரிதான்.

2.என்னுடைய அடைப்புக்குள்ள முள்கம்பி வேலிகளுக்குள் வாதியின் தபசில் சொத்து உள்ளதாக வாதி கட்சி செய்கிறார் என்றால் ஆம். அதன் அடிப்படையில் தான் ஆணையர் நியமனம் செய்ய வேண்டும் என்று கோரியுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நீதிமன்ற

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.03 18:23:25 +0530

ஆணையர் அறிக்கைக்கு என்னுடைய தென்புற முள்கம்பி வேலிக்கு வடக்கில் என்னுடைய மொத்த அடைப்புக்குள் தபசில் சொத்து உள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் அப்படி தான் சொல்லியுள்ளார். ஆனால் அது தவறாகும்.

3.ஆணையர் மற்றும் நில அளவையர் மூலம் மீண்டும் அளவீடு செய்து என்னுடைய தென்புற முள்கம்பிக்கு தெற்கில் தபசில் சொத்து உள்ளது என்பதை காண்பிக்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். வாதியின் தபசில் சொத்து என்னுடைய தென்புற முள்கம்பிக்கு வடக்கில் என்னுடைய மொத்த அடைப்புக்குள் உள்ளது என்றால் சரியல்ல. நான்தான் வாதியின் தபசில் சொத்தை அத்துமீறி ஆக்கிரமித்து என்னுடைய மொத்த அடைப்புக்குள் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

4.என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய அதிகார முகவர் அஸ்வதி முன்னிலையில் சர்வேயர் உதவியுடன் அளந்து முள்கம்பி வேலி அமைத்துள்ளதாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள தென்னை மற்றும் மாமரங்கள் எனது இடத்தில் உள்ளன என்றும் வழக்கு சொத்தில் இல்லை என்றும் சொன்னால் எனக்கு சரியாக தெரியவில்லை. வழக்கு சொத்து மற்றும் அதனை சுற்றியுள்ள சொத்துக்களை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் நேற்று பார்த்தேன்.

5.வழக்கு சொத்தில் தென்னை மற்றும் மாமரங்கள் கிடையாது என்று ஒப்புகொண்டால் எனக்கு பாதகமாகும் என்பதால் மழுப்பலாக சரியாக தெரியவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சீமை கருவேல

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.03 18:23:34 +0530

மரங்களை கொண்டு நான் வேலி எதுவும் அமைக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய எதிர் வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலுத்தில் வாதியின் தபசில் சொத்து காலி இடமாக என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் 2009ம் ஆண்டிலேயே முள்வேலி அமைத்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6.வாதி தபசில் சொத்தினை கிரையம் வாங்குவதற்கு முன்பே நான் நான்கு பக்கமும் முள்வேலி அமைத்து அனுபவம் செய்து வந்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. வாதி தபசில் சொத்தினை கிரையம் வாங்கும் போது எந்த புல எண்ணில், எந்த பக்கத்தில் நிலம் அமைந்துள்ளது என தெரியாமல் கிரையம் பெற்றுள்ளதாக நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. வாதி தபசில் சொத்தினை கிரையம் வாங்கும் முன்பு நேரில் சென்று பார்க்காமல் கிரையம் வாங்கியுள்ளதாக நான் பொய் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

7.வாதி கிரையம் பெற்ற தேதியில் இருந்து தபசில் சொத்து அவரது அனுபவத்தில் இல்லை என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்களை நான் அத்துமீறி ஆக்கிரமிப்பதற்கு முன்பாக வாதியின் அனுபவத்தில் தான் தபசில் சொத்துக்கள் இருந்து வந்தன என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் செய்த அஸ்வதி பிரதீப்புக்கு அதிகாரம் கொடுத்த நபர்களின் குடும்ப கொடி வழி பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அஸ்வதி பிரதீப் வாதிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் செல்லாது என்று நான் கூறுவது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.03 18:23:40 +0530

8.வழக்கு சொத்துக்கள் சரியான முறையில் மதிப்பீடு செய்யப்பட்டு உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை என்று நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. அசோக்குமார், பிரேம் ஆதித்தன், T.K எக்னேஷ்வரன் ஆகியோர் தாவா வழக்கிற்கு அவசியமான தரப்பினர் என்று நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் எல்கைமால்கள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதாக பொய் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

9.வழக்கு சொத்துக்களை அபரிக்க வேண்டும் என்னும் நோக்கில் ஆக்கிரமித்து வைத்து கொண்டு பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களுக்கு அடுத்த மேற்கில் தென்வடலாக தார் ரோடு செல்கிறது என்றால் சரிதான். வாதி கேட்டுள்ளபடி செலவு தொகையுடன் வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN

Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.03 18:23:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.